## கம்பம் நகராட்சி

2020–ஆம் ஆண்டு மே மாதம் (29.05.2020) ஆம் நாள் வெள்ளி கிழமை **பிற்பகல் 4.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனி அலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

## கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 05/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 05/2020–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு:** மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | கம்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இயற்கை இடர்பாடுகளால் சேதமடைந்த சாலைகள், போக்குவரத்து மற்றும் இதர வகையில் சேதமான சாலைகள் மற்றும் குடிநீர் அபிவிருத்தி திட்ட பணிகள் மேற்கொண்ட வகையிலும் சேதமடைந்த சாலைகளை மேம்பாட்டு பணிகள் செய்திடவும், நகர்பகுதியில் உள்ள விரிவாக்க பகுதியில் சாலைகள் மட்டும் அமைக்கப்பட்டு மழைநீர் வடிகால் அமைக்கப்படாத இடங்களில் புதிதாக மழைநீர் வடிகால் வசதி ஏற்படுத்திடவும் கீழ் ரூ. **500.00** இலட்சம் மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ள விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. |

| **வ. எண்** | **பணிகளின் பெயர்** | **மதிப்பீடு ரூ. லட்சத்தில்** |
|---|---|---|
| 1. | Improvement of B.T. Surface in R1- W.No.32,Sukkangal patti cross street( N to S), R2- W.No. 14, Nandhagopal samy nagar 2nd Street, R3,W.No.14, Nandhagopal samy kovil cross Street ( N to S & E to W ) R4-W.No. 9 Subramaniyasamy Kovil Cross Street(N to S), R5-W.No.25,Egaluthu Road 1st Cross Street(N to S),R6-W.No.25,Egaluthu Road 2nd Cross Street , W.No.25, R7-Egaluthu Road 3rd Cross Street R8-W.No.11,Cumbum mettu road cross street ( Muslim Street near odai bridge, Noonmeal Centre), R9- W.No.11,Cumbum mettu road cross street opp & near Ap petrol bulk , 60 feet cross street, R10- W.No.11,Cumbum mettu colony cross street, R11- W.No. 24, N.K.P. Raju Street( N to S), R12-W.No. 14, Krishnapuram( N to S & E to W) in cumbum municipality. ( Package I) | **200.00** |
| 2. | Improvement of B.T. Surface in R1-W.No. 4, Malayammal Puram Main Road, R2-W.No. 4, Malayammal puram Cross streets, R3-W.No. 31,Kakkan Colony Cross street ( Opp. Arivuthirukovil) R4-W.No. 31, Kakkan Colony Cross street ,R5-W.No. 31, Kakkan Colony Main Road,R6- W.No. 30,Angoore palayam T.T.V.Nagar,R7-W.No. 29,Maninagar cross Street in cumbum municipality. ( Package II) | **200.00** |
| 3. | Improvement of B.T. Surface in R1-W.No.4,Isac Bothagar Street, R2-W.No. 28, Kalavasal Cross Street ( Police Quarters),R3-W.No. 33, Pasumpon Muthuramalingam Cross Street, R4-W.No. 19, Kalavsal Road Cross Street ,R5-L.F.Road Cross Street,R6-Thathappankulam kovil street Thathappankulam cross Street in cumbum municipality. ( Package III) | **100.00** |
| | Total | **500.00** |

**அலுவலக குறிப்பு** – 1) விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்கண்ட பணிகளுக்கு அரசு திட்டங்களின் கீழ் முழுமானியத்துடன் கூடிய நிர்வாக அனுமதி வழங்கக்கோரி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**4.** முதன்மை செயலர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வாங்கல் துறை, சென்னை அவர்களின் ஆய்வு கூட்ட நடவடிக்கைகள் நாள். 19.12.2018–ன்படி கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் (IUDM) 2018–19 ன் கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, தலைமைப்பொறியாளர் அவர்களிடம் உரிய தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி கோரி அவற்றில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய ஒப்பந்ததாரருக்கு வேலை உத்திரவு வழங்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிகள் நடைபெற்று மண்டல செயற்பொறியாளர் அவர்களின் அறிவுரையின்படி பணிகள் யாவும் முடிக்கப்பட்டுள்ளது.

| வ.எண் | பணிகள் பெயர் | திட்ட மதிப்பீடு ரூ. இலட்சத்தில் | பணிகள் முடிவுற்ற செலவினத் தொகை ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | கோம்பை ரோடு, குரங்குமாயன் தெரு, விவேகானந்தர் தெரு, மந்தையம்மன் கோவில் தெரு, மந்தையம்மன் கோவில் பின்புறம், மந்தையம்மன் கோவில் கிழக்கு பகுதி மற்றும் நந்தகோபால் கோவில் மேற்கு தெருவில் தார்சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல்(சிப்பம்–1) | 200.00 | 199.90 |
| 2 | ரேஞ்சர்ஆபிஸ் ரோடு, ஆங்கூர்பாளையம் ரோடு, கக்கன் காலனி மெயின்ரோடு, ஏகலூத்து ரோடு டி.எஸ்.கே. நகர் சந்திப்பு, டாக்டர். அம்பேத்கார் தெரு, எல்.எப்.ரோடு குறுக்கு தெரு, செல்லாண்டியம்மன் கோவில் தெரு மற்றும் தாத்தப்பன் குளம் 5–வது குறுக்கு தெருவில் தார்சாலை மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளுதல் (சிப்பம்–2) | 200.00 | 199.96 |
| 3 | ராமையன் தெரு, நந்தகோபால் சாமி கோவில் குறுக்கு சந்து, ஜல்லிக்கட்டு தெரு, வள்ளலாளர் தெரு, காளவாசல் மெயின் ரோடு, மணிநகர் 2–வது குறுக்கு தெரு, மணிநகர் 3–வது குறுக்கு தெரு, சுக்காங்கல்பட்டி ரோடு குறுக்கு தெரு (நகராட்சி அலுவலக வடக்கு வாசல்), பூங்கா குறுக்கு தெரு மற்றும் சுக்காங்கல் பட்டி ரோடு குறுக்கு தெருவில் பேவர்பிளர் சாலை மேம்பாட்டு பணிகள் செய்தல் மற்றும் சிறுபாலங்கள் அமைத்தல் (சிப்பம்–3) | 100.00 | 99.90 |
| | **மொத்தம்** | **500.00** | **499.76** |

மேற்கண்ட அட்டவணையின் படி, பணிகள் யாவும் முடிக்கப்பட்டு மண்டல செயற்பொறியாளர் அவர்களின் ஆய்வு அறிவுரைகளின் படி மேற்படி பணிகள் திட்ட மதிப்பீட்டிற்குள் முடிக்கப்பட்டதில் உள்ள கூடுதல் குறைவு இனங்களுக்கும் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு..** மன்றம் பதிவு செய்யலாம்.

**5.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் மூ.மு.எண். 28369/ ஜே3/2018, 22.11.2018 ஆம் தேதிய செயல்முறை உத்தரவின்படியும், இந்நகர்மன்ற தீர்மான எண். 1986, நாள். 25.02.2020– இன் படியும், இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்கள் 2,3,5,7,9,10,11,12,15,17,19,20,21,22,25 and 27 to 33 வரை மொத்தம் 22 வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவுப் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு 107 துப்புரவு பணியாளர்களை வழங்கும் பணிக்கு ரூ. 143.00 இலட்சம் மதிப்பீட்டில் பணிகள் செய்திட அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் ஒப்பந்தப்புள்ளி விதிமுறைகளின் படி, 20.05.2020 ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. 20.05.2020–இல் ஒப்பந்தப்புள்ளி திறப்பின் போது வலைதளம் வழியாக (Online) ஒப்பந்தப்புள்ளி ஏதும் வரப்படவில்லை. நேரடியாக (Off line) கீழ்கண்டவாறு ஐந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் |
|---|---|
| 1. | Pon Ramar,<br>Labour Constractor,<br>159, MelaAnna Thoppu,<br>SMS Colony 4th Street, Madurai. -625 018. |
| 2. | M/S J.J. Infotech,<br>No.25, Zion Complex,<br>Old Kuyavar Palayam Road, Madurai-9. |
| 3. | M/S, Excell Neat and Tidy Agency,<br>Madurai-2. |
| 4. | Relyon Facility Services PVT LTD,<br>1st Floor, No. 2/20, Second Cross Street,<br>Indira Nagar, Adyar, Chennai. – 600 020. |
| 5. | M/S, UK Security Services,<br>No.12 Sri Ram Nagar 3rd Street, Opp.C.L.E.I.<br>Tharamani Post, Chennai – 13. |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை மதிப்பீட்டுக்குழுவின் மூலம் 21.05.2020 அன்று தொழில்நுட்ப தகுதிகள் குறித்து ஆய்வு செய்ததில் கீழ்கண்ட ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. அதன் விபரம்

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி |
|---|---|
| 1. | M/S, UK Security Services,<br>No.12 Sri Ram Nagar 3rd Street, Opp.C.L.E.I.<br>Tharamani Post, Chennai – 13. |

தொழில் நுட்ப தகுதி பெற்ற மேற்கண்ட ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள விலை விகிதம் (Price pid) 27.05. 2020 அன்று திறக்கப்பட்டது. அதன் விபரம் கீழ்கண்டவாறு,

| வ. எண் | ஒப்பந்ததாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரு. (ஒரு மாதத்திற்கு) | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | M/S, UK Security Services,<br>No.12 Sri Ram Nagar 3rd Street, Opp.C.L.E.I. Tharamani Post,<br>Chennai – 13. | நாள் ஒன்றிக்கு நபர் ஒன்றுக்கு ரூ. 441/– | மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.90% குறைவு |

**அலுவலக குறிப்பு:–** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டு விலை விகிதத்தை விட 0.90% குறைவாக கொடுத்துள்ள M/S. UK Security Services, Chennai – இன் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் ஏற்கலாம்.
**(ந.க.எண். 3767/2019/எச்1)**

6. கம்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட ஏகலூத்து ரோட்டில் அமைந்துள்ள மறவர் மக்கள் மன்றம் முன்புறம் மழைநீர் வடிகாலின் மீது இருந்த பட்டியகற்கள் உடைந்துள்ளதால் அவற்றினை மறவர் மக்கள் மன்றம் தனது சொந்த செலவில் செய்து கொள்வதாக கோரியுள்ளதன்பேரில், மேற்படி இடம் நேரில் பார்வையிடப்பட்டதில் மேற்படி பணிகள் செய்யும் இடம் கம்பம் நகராட்சிக்கு சொந்தமானதாக உள்ளதால், நகராட்சி சொத்திற்கு எவ்வித இடையூறுமின்றி அவ்விடத்தில் மழைநீர் வடிகால் மூடி மட்டும் மறவர் மக்கள் மன்றத்தின் சொந்த செலவில் அமைத்துக்கொள்ளவும், எவ்வித பணிகள் செய்தாலும் மேற்படி சொத்திற்கு சொந்த உரிமை கோர கூடாது என்ற நிபந்தனையின் பேரில் அனுமதி வழங்கும் பொருட்டு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு : –** மன்றம் அனுமதிக்கலாம்.

| | |
|---|---|
| 7. | இந்நகராட்சியில் கம்பம் நகர மக்களின் குடிநீர் தேவைக்கு நகராட்சிக்கென தனியாக புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டம், Urban Infrastructure Development Scheme for small and Medium Towns (UIDSSMT) 2012 - 2013 திட்டத்தின் கீழ் ரூபாய் 18.80 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு பணிகள் முடித்து, தமிழ்நாடு குடிநிர் வடிகால் வாரியத்தினர் கம்பம் நகராட்சிக்கு மேற்படி திட்டம் முழுமையாக இயக்குதல் மற்றும் பராமரித்தல் அனைத்தும் 17.4.2020 நாள் நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும், தற்பொழுது நாடு முழுவதும் கொரோனா–19 என்ற கொடிய நோய் பரவுவரை தடுக்க மத்திய மாநில அரசுகள் ஊரடங்கு சட்டம் அமுலில் உள்ளதால் மேற்கண்ட திட்டம் தலைமை பொறியாளர் ஒப்புதல் பெறும் வரையிலும் மேலும் ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை ஜுலை 2020 முதல் அக்டோபர் 2020 வரை தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பராமரிப்பு மற்றும் இயக்குதல் பணிகள் மேற்கொள்வதற்கு தயார் செய்த மதிப்பீட்டு தொகை ரூ. 9.80 இலட்சத்திற்கு (ரூபாய் ஒன்பது இலட்சத்து என்பதாயிரம் மட்டும்) ஒப்பந்தப்புள்ளி கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலககுறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி, பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் விநியோகம் செய்யவும், தலைமை பொறியாளர் ஒப்புதல் பெறும் வரை தற்காலிகமாக நான்கு மாதங்களுக்கு உள்ளூர் ஒப்பந்தப்புள்ளி பெற்று இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி செய்வதற்கும், ஒப்பந்தப்புள்ளி கோரவும் அதற்கான செலவுத் தொகைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 8. | இந்நகராட்சி வார்டு எண் 31, நந்தகோபால்சாமி நகர் மற்றும் வார்டு எண். 30 ஆங்கூர்பாளையம் ரோடு ஆகிய இரண்டு இடங்களில் உள்ள நுண்உர செயலாக்க மையங்களுக்கு தண்ணீர் வசதி செய்திட, ஆழ்துளை கிணறு அமைத்து மின்மோட்டார் பொருத்திட ஆகும் மதிப்பீட்டு தொகை ரூ. 4,50,000/–க்கு (ரூபாய் நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலககுறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி நுண்உர செயலாக்க மையத்திற்கு தண்ணீர் தேவையின் அவசியம் கருதி விரைவில் பணி முடிக்கும் பொருட்டு, மன்ற அனுமதியை எதிர்நோக்கி ஆணையாளர் / தனி அலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம். |
| 9. | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண். 14, கிருஷ்ணாபுரம் தெற்கு பகுதியில் அமைந்துள்ள பொது கழிப்பிடத்திற்கு தேவையான மின் வசதிகள், மின்மோட்டார் பொருத்துதல், பி.வி.சி டேங்க் அமைத்தல் மற்றும் அடிப்படை வசதிகள் செய்திடவும் திரு. வி. கிருஷ்ணன், ஒப்பந்ததாரர் மூலம் மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி 1920ம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 15–ன் கீழ் ரூ. 48,950/– செலவில் பணிகள் மேற்கொள்ளப்பட்ட விபரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது. |
| | அலுவலகக்குறிப்பு.. மன்றம் பதிவு செய்யலாம். |
| 10. | இந்நகராட்சிக்கு செந்தமான குடிநீர் டிராக்டர் எண் TCU 9465 மற்றும் டேங்கர் எண் TCU 9769க்கு சாலைவரி ரூ. 5,000/–ம் செலுத்த இந்நகர்மன்ற தீர்மான எண். 1943, நாள். 31.01.2020ல் ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. தற்போது இணையதளம் மூலம் விண்ணப்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளதன்படி ரூ. 6708/– செலுத்தவேண்டியுள்ளது. எனவே, ஏற்கனவே நகர்மன்ற ஒப்புதல் பெற்றுள்ள தொகையுடன் கூடுதலாக ரூ. 1,708/– சேர்த்து ஆகமொத்தம் **ரூ. 6,708/–**ஐ வட்டார போக்குவரத்து அலுவலகம், உத்தமபாளையம் அலுவலகம் மூலம் 2020–2021ம் ஆண்டிற்கான சாலைவரி தொகையினை இணையதளம் மூலம் செலுத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலககுறிப்பு:-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. மேற்படி பணிக்கான செலவினத்தை 2020–2021 ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். |

<table>
<tr><td>11.</td><td>இந்நகர்மன்ற தீர்மான எண்.1628, நாள்.31.10.2018 – இல் அனுமதிக்கப்பட்டுள்ளபடி, இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய வசூல் மையம் மற்றும் கம்பம்மெட்டு வசூல் மையத்தில் அமைந்துள்ள இரண்டு தடையில்லா மின் வழங்கிகளிலுள்ள மின்கலன்களின் மின்ஏற்புத் திறன் மிகவும் குறைவாக இருப்பதால், பழைய மின்கலன்களை கொடுத்து, புதிதாக இரண்டு நகரும் தடையில்லா மின் வழங்கிகள் 3 KVA 96VDC Movable Inbuilt online UPS – 2 Nos விநியோகம் செய்திட 27.05.2020 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.<br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>தொகை (ரூபாயில்)</th></tr>
<tr><td>1.</td><td>சன் பவர் சிஸ்டம்ஸ் & சர்வீசஸ், 6/21எ, வெங்கட்ராமன் தெரு, சின்னக்சொக்கிக் குளம், மதுரை–2</td><td>ரூ. 62,780/–</td></tr>
<tr><td>2.</td><td>ஸ்ரீ பாலமீனாட்சி எலக்ட்ரிகல் சென்டர், 2/299-D, குபேரன் தெரு, விஸ்வநாததாஸ் நகர், மதுரை–14</td><td>ரூ. 63,000/–</td></tr>
<tr><td>3.</td><td>அல்ட்ரா பவர் சொலுசன்ஸ், 8/33, லூர்து நகர், 7–வது மெயின்ரோடு, கே.புதூர், மதுரை–7</td><td>ரூ. 60,700/–</td></tr>
</table></td></tr>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு.. மேற்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கிய மதுரை, அல்ட்ராபவர் சொலுசன்ஸ், நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td>12.</td><td>தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டம் (TURIP 2019-20)ன்கீழ் ரூ. 10.00 கோடி மதிப்பீட்டில் , இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சாலை மேம்பாட்டு பணிகள் செய்திட சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை உத்திரவு ந.க.எண். 17349/2019/இ3, நாள். 14.10.2019 –ன்படி நிர்வாக அனுமதி வழங்கிய மேற்கண்ட பணிகளுக்கு மின்னனு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை சென்னை, செய்தி மக்கள் தொடர்பு இயக்குநர் வெளியீட்டு ஆணை எண்.3823/ஒப்பந்தபுள்ளி/2019, நாள்.23.10.2019 வழியாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் பட்டியல் தொகை ரூ. 58,748/–ஐ (ரூபாய் ஐம்பத்து எட்டாயிரத்து ஏழுநூற்று நாற்பத்து எட்டு மட்டும் ) அக்கார்டு அட்வர்டைசிங் ஏஜென்ஸி, சென்னை நிறுவனத்திற்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு : – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண். 2649/2019/இ1)</td></tr>
<tr><td>13.</td><td>இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு – 31 கக்கன் காலனியில் புதிதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி நடைபெற்று வருவதால், மேற்கண்ட பணி செய்யும் போது 3” மற்றும் 5” பகிர்மானக் குழாய் மற்றும் குடிநீர் இணைப்புகள் பழுதாகி உள்ளது. புதிதாக 5” PVC பைப் மற்றும் 3” PVC மெயின் தெரு மற்றும் குறுக்கு சந்துக்கள் பதிக்கவும், குறுக்கு சந்துக்களில் பதிக்கப்பட்ட மெயின் பைப்பில் வீட்டு இணைப்புகள் வழங்கவும், வார்டு – 3ல் குரங்குமாயன் தெரு மற்றும் வார்டு –30 மஞ்சக்குளம் ரோட்டில் 3’’ PVC பகிர்மான குழாய் பதிக்க உத்தேச செலவினம் ரூ. 5.80 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
<tr><td></td><td>அலுவலகக் குறிப்பு : – 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணியினை 2020–2021 குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.</td></tr>
</table>

| | |
|---|---|
| **14.** | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தேனி அவர்களின் கடித எண். DEE/TNPCB/TEN/COVID19/2020-1இ: **25.04.2020**–ஆம் தேதிய கடிதத்தில் கொரோனா தொற்று தொடர்பாக உருவாகும் மருத்தவ கழிவுகளை சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டத்தின் மருத்துவ கழிவுகள் மேலாண்மை **2016**–ன் படி வெளியேற்றுவது குறித்து உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி கம்பம் நகராட்சி பகுதிகளில் கோவிட் – **19** நோய் தொற்று ஏற்பட்ட வீடுகளிலிருந்து பெறப்படும் மருத்துவ கழிவுகள் மற்றும் இதர கழிவுகளை சேகரித்து முறையாக அப்புறப்படுத்த ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மென்ட் லிமிடெட் , வேல்முருகன் நகர், பைபாஸ் ரோடு, மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியில் குறிப்பிட்டுள்ளவாறு மாதாந்திர கட்டணம் ரூ. **20,000**/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) அவசர, அவசியம் கருதி தனி அதிகாரியின் முன் அனுமதி பெற்று தினசரி **15** கிலோவிற்கு உட்பட்டும், கூடுதலாக சேகரமாகும் மருத்துவ கழிவுகளுக்கு அரசு அனுமதி அளித்துள்ள கட்டணம் ரூ. **52**/– (கிலோ ஒன்றுக்கு) என்ற விகிதத்தில் ராம்கி எனர்ஜி அன்ட் என்விரான்மென்ட் லிமிடெட், மதுரை நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 0844/2020/எச்1)** |
| **15.** | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் உத்தரவின்படி, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திடக்கழிவு மேலண்மைத்திட்டத்தின் கீழ், **22** வார்டுகளில் தனியார் மூலம் துப்புரவு பணிகள் செய்வதற்கு **24.03.2020**–ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. ஒப்பந்த விதிகளின்படி தமிழ் வளர்ச்சி மற்றும் செய்து துறை வழியாக நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு இயக்குநர், Accord Advertising Agencies, சென்னை அவர்கள் மூலம் DIPR/1573/TENDER/2020, Dated. 26.03.2020-ன்படி விளம்பரக் கட்டணத் தொகைக்கு பில் வரப்பட்டுள்ளது. எனவே, விளம்பரக்கட்டண தொகை ரூ. **68,040**/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு : –** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி நிறுவனத்திற்கு தொகை வழங்க வேண்டியுள்ளதால், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று மேற்படி தொகை வழங்குவதை மன்றம் அனுமதிக்கலாம். **(ந.க.எண். 3767/2019/எச்1)** |

**ஒப்பம்/– திருமதி. ரா. கமலா**
**ஆணையாளர்,**
**கம்பம் நகராட்சி.**

**நாள். 29.05. 2020**
**இடம். கம்பம்**